# பிள்ளை வளர்ப்பில் – வேதாகமம்

**R. Princess, M.C.A.**
Tuticorin

***முன்னுரை***

*இந்த காலகட்டங்களில் குழந்தை வளர்ப்பு பெரும் சவாலாகவே உள்ளது. சரீர பிரகாரமாக மட்டுமின்றி மன தைரியமுள்ள சிறந்த ஆற்றல் கொண்டவர்களாக பரிசுத்தமுள்ள ஜீவியம் நடத்தும் ஞானம் கொண்டவர்களாக பிள்ளைகளை வளர்ப்பது மிகப்பெரிய அவசியமான கடமை. வேதாகமத்தின் அடிப்படையில் ஓர் சிறந்த பெற்றோராய் நம் பிள்ளைகளை வளர்க்க வழி நடத்த நாம் என்ன செய்ய வேண்டும் எதைச் செய்யக் கூடாது என்பதை பரிசுத்த வேதாகமம் நமக்கு கற்று தருகிறது.*

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i2-July.6497

## ஞானமுள்ள பிள்ளை

**“உமக்கு இந்த பிள்ளையை வளர்க்கும்படி எபிரெய ஸ்திரீகளில் ........ ஒருத்தியை நான் போய் அழைத்துக் கொண்டு வரட்டுமா என்றாள்”**

***- யாத்.2-7***

எகிப்து தேசத்தில் பிறக்கும் ஆண் பிள்ளைகளையெல்லாம் நதியில் போட்டுவிட பார்வோன் கட்டளை பிறப்பித்த அந்த நாட்களில் யோகபேத் என்னும் லேவியின் குமாரத்தி தான் பெற்ற பிள்ளையை மூன்று மாதங்களுக்கு மேலாக ஒளித்து வைக்க வழியின்றி நாணற்பெட்டியில் வைத்து நதியில் ஓரத்தில் விட்டாள். தனது மூத்த மகள் மரியாமை கண்காணிக்க விட்டிருந்தாள்.

அந்தத் தாய் ஞானமாய் தன் மகளுக்கு உபதேசித்து இருந்ததால் அந்த பெண் பிள்ளை பார்வோனின் குமாரத்தி ஞானமாய் பேசி தன் தம்பியாகிய மோசேயை ஆபத்தில் இருந்து மீட்கிறாள்.

நாமும் நமது பிள்ளைகளுக்கு சமயங்களுக்குத் தக்க ஞானமாய் நடந்து கொள்ளும் அறிவை ஒவ்வோர் நாளும் போதிக்க வேண்டும். நீதிமொழிகள் ***25-11*** இவ்விதமாய் சொல்கிறது.

**“ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித் தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்கு சமானம்”.**

## பொறுப்புள்ள பிள்ளை

“என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும். அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார் என்றாள்” ***- 11 இராஜா.5-3***

இஸ்ரவேல் தேசத்திலிருந்து சீரிய தேசத்திற்கு அடிமையாக சிறைப் பிடித்து கொண்டு வரப்பட்ட ஒரு சிறுபெண் அவள்.

அவளது தாய் இஸ்ரவேல் தேசத்தில் இருக்கும் போது அவளை எப்படி வளர்த்திருந்தால் அந்தப் பெண் நாகமானின் வீட்டில் அடிமையாக பணி அமர்த்தப்பட்டுள்ள அந்த இக்கட்டானசூழலிலும் பொறுப்புள்ள பிள்ளையாய் நடந்திருப்பாள் என்பதை சற்று சிந்தித்துப் பார்ப்போம்.

தன் தேசத்தில் நடப்பவைகளை தன் தாய் மூலம் அறிந்திருக்கிறாள். தற்போதும் தான் அடிமையாய் உள்ள வீட்டின் பிரச்சனைகளையும் அறிந்து வைத்துள்ளாள். தனது நாச்சியாரான நாகமானின் மனைவியிடம் தைரியமாய் எலிசா தீர்க்கதரியைப் பற்றி எடுத்துக் கூறுகிறாள். அவளது நாச்சியாரும் அவள் கேட்கிறாள் என்றால் இந்தப் பெண் அந்த வீட்டில் எவ்வளவு பொறுப்புள்ளவளாய், உண்மையாய் நடந்திருப்பாள் என்பதை நம்மால் யுகிக்க முடிகிறது.

இன்று நமது பிள்ளைகள் எப்படி வளர்கிறார்கள் பொறுப்புள்ளவர்களாய் எல்லாச் சூழலிலும் நடந்து கொள்கிறார்களா? நாம் எப்படி அவர்களை பொறுப்புள்ளவர்களாய் மாற்றப் போகிறோம்.

**“எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே. அவன் நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே”**

**- புலவர் புலமைபித்தன்.**

## ஆளுமையுள்ள பிள்ளை

“அவன் கர்த்தருடைய பார்வைக்கு செம்மையானதைச் செய்து தன் தகப்பனாகிய தாவீதின் வழிகளில் வலது இடது புறமாக விலகாமல் நடந்தான்.” - II நாளா. ***34-2***

யோசியா ராஜாவாகிற போது அவனுக்கு வயது எட்டு. மிகவும் சிறிய வயது. ஆயினும் அந்தச் சிறுவன், தான் ராஜவம்சத்தில் பார்த்து கற்று அறிந்து கொண்டவைகளை தான் அரியணையில் ஏறியவுடன் அழகாய் கையாளக் கற்றுக் கொண்டான்.

யோசியா தன் முழு இருதயத்தோடு கர்த்தரின் கட்டளைகளைக் கைக் கொண்டான் II நாளா ***34-31*** அவன் உயிரோடிருந்த நாளெல்லாம் கர்த்தரைவிட்டு பின் வாங்கினதில்லை II நாளா ***34-33*** யோசியா கர்த்தரின் ஆலயத்திற்கு தன்னுடைய ஆஸ்தியிலிருந்து எடுத்துக் கொடுத்தான். II நாளா ***35-7.***

நமது பிள்ளைகளுக்கு இன்று ஆளுமைத் திறமைகள் எப்படி உள்ளது? நேர்மையாய் உத்தமமாய் வாழ சிறுவயதிலிருந்து நாம் கற்றுக் கொடுக்கிறோமா?

## பண்புள்ள பிள்ளைகள்

“ஐந்து அப்பமும் இரண்டு மீன்களுமேயல்லாமல் வேறொன்றும் இல்லை” ***(மத்.14-17)***

தனது தாய் தனக்கு பசிபோக்க கொடுத்து அனுப்பிய உணவை தந்ததன் மூலம் அவ்விடத்தில் ஓர் அற்புதம் நிகழ காரணமாகிப் போனான் அந்தச் சிறுவன். பெற்றோரிடம் கேட்டு, பார்த்து, பழகிக் கற்றுக் கொண்ட நற்பண்புகளை சமுதாயத்தில் பிள்ளைகள் வெளி க்கொணரும் போது நல்ல சமுதாயம் உருவாகும். ஆண்டவரின் வார்த்தைகளை கவனிக்க ஓடி வந்த சிறுவன், தன்னிடமுள்ளதை பகிர்ந்து கொடுக்க முன் வந்த அந்தச் சிறுவன். இப்பொழுதும் இந்த அற்புதம் பேசப்படும் இடத்திலெல்லாம் நினைவு கூறப்படுகிறான்.

நமது பிள்ளைகள் எப்படிப்பட்ட பண்புகளுடன் இன்று வளர்க்கிறார்கள்? அவர்களை நற்பண்புகளுடன் வளர்க்க நாம் எடுக்கும் முயற்சி என்ன? சிந்திப்போம்.

## பெற்றோரின் ஜெபமும் உபதேசமும்

“நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய். ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்துவிடுவேன்”. ஓசி ***4-6.***

பிள்ளைகளுக்காக எப்பொழுதும் முழக்காலில் நிற்கும் பெற்றோர்கள் அவர்களுக்கு தேவ பாதுகாப்பை உறுதிப்படுத்துகிறார்கள்.

**தீமைக்கு விலக வேண்டும்**

சிம்சோனின் பெற்றோர் வாக்குதத்தத்தின் படி பெற்ற பிள்ளையை சற்று அதிகமாக செல்லமாக வளர்த்த காரியத்தினால் சிம்சோனின் வாழ்வில் நடந்த நிகழ்வுகள் நமக்குத் தெரியும். (நியா.16-1)

ஏரோதியாளின் மகள் நல்ல நடனம் ஆடத்தெரிந்திருந்தும் பாவச் செயலாக, யோவாஸ்நானின் தலையைக் கேட்க ஏவ்விடப்பட்டு திறமைகள் மறைந்து பாவத்திற்குள்ளானாள். (மத் 14-8)

லோத்தின் குமாரத்திகள் உலக நடப்புகளை அறியாமல் குருட்டாட்டமாய் சோதாமின் பாவ இச்சைகளைப் பார்த்து வளர்ந்ததால் தங்கள் தகப்பனிடமே தவறாக நடந்து கொள்ளும் பாவச் செயலில் இறங்கினர். இதனால் மோவாபியர், அம்மோனியர் எனும் சபிக்கப்பட்ட சந்ததி உருவாகக் காரணமாயினர். (ஆதி.19-31,32)

காயினும் கூட பொறாமை எனும் தீயகுணத்தால் சகோதரனைக் கொன்று பெரும் பாதகத்திற்குள்ளானான். (ஆதி 4-8)

**முடிவுரை**

"கர்த்தருடைய கற்பனை தூய்மையும் கண்களை தெளி விக்கிறதுமாயிருக்கிறது". சங் 19-8

இன்றைய காலகட்டங்களில் நமது பிள்ளைகள் வழுவிப் போக பல சந்தர்ப்பங்கள் காத்துக் கிடக்கின்றன. ஆகவே நாம் செய்ய வேண்டியது என்ன?

நமது முழங்கால் ஜெபமும் பிள்ளைகள் உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களையும் காட்டிலும் தேவப்பிரசன்னத்தோடு வாழ கற்றுக் கொடுக்கும் ஞானமும் தான்.

"வாலிபன் தன் வழியை எதனால் சுத்தம் செய்வான் உம்முடைய வசனத்தின் படி தன்னைக் காத்துக்கொள்வதினால் தானே" - சங் 119-9

பிள்ளைகளையும் நம் குடும்பத்தையும் ஆண்டவரிடம் ஒப்புக்கொடுப்போம். அவர் செட்டைகளின் நிழலில் பாது காப்பாய் வாழ்வோம்.